முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2025) சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் நடைபெற்ற சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு தொடக்க விழாவில், சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்திய பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநர் சர் ஜான் மார்ஷல் அவர்களுக்கு சென்னை, எழும்பூர், அருங்காட்சியக வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள திருவுருவச் சிலைக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வின்போது, நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் (மு.கூ.பொ.) த. உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தொல்லியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் கிரெக் ஜாமிசன், கா. ராஜன், திருமதி. நயன்ஜோத் லஹிரி, ஆர்.பாலகிருஷ்ணன், டோனி ஜோசப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பேரறிஞர் அண்ணா மாரத்தான் போட்டிக்கு இணையான நெடுந்தூர ஓட்டப் போட்டியினை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, வாலாஜா ஒன்றியக் குழு தலைவர் சேஷா வெங்கட், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத் ஜாசீர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

குவைத்தில் "தி.மு.க. அயலக அணி குவைத் தளபதி பேரவை" சார்பில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் "மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு"!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – துணை மேயர் ஜி.காமராஜ் சிறப்புரை!

குவைத், ஜன.6- குவைத்தில் உள்ள தி.மு.க. அயலக அணி சார்பில், 03.01.2025 அன்று மாலை 5.00 மணியளவில் "தி.மு.க. அயலக அணி மற்றும் குவைத் தளபதி பேரவை" சார்பில் "புலம் பெயர்ந்தோர் நலன் காக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு" குவைத் தளபதி பேரவை அமைப்புச்செயலாளர் மேட்டுப்பட்டி அ. ராஜா முஹம்மது தலைமையேற்க கடியாவயல் கருப்பையா, காஜா மொஹைதீன், டேவிட், பிரசாந்த், அசோக் குமார், அமுதா மார்ட்டின், போஜன், சுப்பிரமணி, வெங்கடேசன், சரவணன், ராஜு ஆகியோர் முன்னிலை வகிக்க, மதுரை காளிதாசன் வரவேற்புரையாற்றிட நாசர் நூர் முகமது நன்றியுரையாற்றிட கவிஞர் வீட்டுக்கட்டி மஸ்தான், ராணிப்பேட்டை கிளாட்வின் பாக்கியராஜ் ஆகியோர் இம்மாநாட்டு நிகழ்ச்சிகளை தொகுப்பு வழங்கிட - மாணவர் அணிச்செயலாளர் எம்.ஆர். எம்.நபில்ராஜா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில் குவைத், தஸ்மா டீச்சர் சொசைட்டியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இம்மாநாட்டில் குவைத் அயலக அணி அமைப்பாளர் சிதம்பரம் தியாக ராஜன், ஜனாப் அபூபக்கர் சித்தீக், சுப்ரீம் கார்கோ அண்ட் ட்ராவல்ஸ் எதுமலை பாவாசா, அல் அவுதா சாதிக் பாஷா, கவிஞர் சம்சுதீன், வல்லம் அப்பாஸ், எரவாஞ்சேரி சாகுல் ஹமீது, கொடுந்துறை முகமது அலி, மற்றும் சாமி மங்களேஸ்வரன் சஜ்ஜாத் அலிகான் நூஹ் அலி அப்பாஸ் எஸ் எம் எல் குமார் இன்ஸ்பெக்டர், திருச்சி குமார் சிராஜுதீன் ஜனாப் பாய், ஆனந்த் சலூன் ஜம்ஜம் இப்ராஹிம் கே அய்யூப் பாய், டேஷ்டி ஏஎஸ் சிராஜுதீன் சிவக்குமார், பாலிவுட் சீனிவாசன் அல்ஹவுதா சஹீன் தாலிப் மற்றும் கழக முன்னோடிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொண்டர் அணி சிட்கோ எஸ். அன்வர்தீன் கவிஞர் ச.ச.கலையரசன் முன்னிலை

கவிஞர் குரல் பதிப்பகம் நூல் வெளியீட்டு விழா!

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வெளியிட ஜோசப் சாமுவேல் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை, ஜன.6- சென்னை கவிஞர் குரல் பதிப்பகம் சார்பில் 86 வது சென்னை பெரு நகராட்சி உறுப்பினர் எம். கமல் தலைமையில் பதிப்பாசிரியர் கவிஞர் க.ச. கலையரசன் வரவேற்புரை தொண்டர் அணி தோழர் சிட்கோ எஸ். அன்வர்தீன், சு.ஞானசேகரன், கவிஞர் மீரா (எ) மீனாட்சி சுந்தரம் கவிஞர் எடையூர் நாகராஜன், கே.ஏ.நாகூர் மீரான், எம். சக்திவேல், தஞ்சை ராம் கம்பர், மு.தேவராசன் முன்னிலையில் 86 வது சென்னை பெரு நகராட்சி உறுப்பினர் எம் கமல் தலைமையில் (மு .க .எனும் முகவரி) முத் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூறு கவிஞர்கள் நூறு கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று (06:01:25 திங்கள் கிழமை) காலை 11 மணியளவில், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக கட்டிட வளாகத்தில் நடைபெறுகிறது. உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நூல் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்

முதல் பிரதி பெற்று வாழ்த்துரை அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கவிஞர் கவிதைப் பித்தன், அருட்சுடர் .த.சந்திரசேகர் ஜெ. முகம்மது மீராசாகிப் மா.வள்ளிமைந்தன் . வா.மு. சேதுராமன் .தமிழ் அமுதன். மு.ஞானமூர்த்தி .பா. சம்பத்குமார். அரிமா டாக்டர் சிந்தைவாசன் த.கண்ணபிரான். பொற்கொடி கண்ணபிரான் மற்றும் கவிஞர்கள் கலந்துக் கொண்டு நூலை பெறுகிறார்கள் நன்றியுரை: ஆன்மீகச்சுடர் ஈ.ஆறுமுகம்.

தேதி மாற்றம்

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம்! 09.01.2025 அன்று நடைபெறுகிறது!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 09-01-2025 வியாழக்கிழமை, மாலை 04.30 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில், எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ். மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி. செந்தில்குமார், கா. அமுதரசன், பி.எம். ஆனந்த், கா. பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, மாநில, அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1) கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ் மாணவர் மன்றத்தின் நிரப்பப்பட்ட உறுப்பினர் விண்ணப்பப்படிவம் மற்றும் நிர்வாகிகள் பட்டியல் ஒப்படைத்தல்;

2) அணியின் சார்பாக மாவட்ட அளவில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த மினிட் புத்தகம் ஆய்வு;

3) மாணவர் அணி ஆக்கப் பணிகள் குறித்து.

"அண்ணா அறிவாலயம்,"
சென்னை.
நாள்: 04.01.2025

சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் பழைய காயல் ஊராட்சியில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூபாய் 8.70 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்கத் தொட்டியினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி செ. அமிர்தராஜ்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.உமரி சங்கர்,மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, பழைய காயில் ஊராட்சி மன்ற தலைவர் செல்வகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், பில்லா ஜெகன் மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில்

2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியுள்ளது திராவிட மாடல் அரசு!

கோவையில் அமைச்சர் செந்தில் பாலாஜி பேச்சு!

கோவை, ஜன.6- பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியுள்ள தமிழக அரசு என மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற நலத்திட்ட விழாவில் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கோவை மாவட்டம், அன்னூர் குன்னத்தூர் ஊராட்சியில் ரூ 30 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து மேட்டுப்பாளையம் வட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெள்ளேபாளையம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.60 லட்சம் மதிப்பில் எலகம்பாளையம் பகுதியில் புதிய நீருந்து நிலையம், ரூ.8 லட்சம் மதிப்பில் ராசடி ஏடி காலனி பகுதியில் சுகாதார வளாகம், ரூ.6.65 லட்சம் மதிப்பில் பெள்ளேபாளையம் ஜே.ஜே.நகர் பகுதியில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் என மொத்தமாக ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இதனை தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் செந்தில் பாலாஜி விழாவில் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

சாலை மேம்பாட்டுக்கு ரூ.25 கோடி நிதி!

இதே போல் சிக்காரம்பாளையம் ஊராட்சி கண்ணார்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.45 லட்சம் மதிப்பில் கட்டி கலையரங்கத்தை துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் செந்தில் பாலாஜி "கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மின் இணைப்புகள் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிலையில் தி.மு.க. வின் மூன்றாண்டு ஆட்சி காலத்திலேயே இரண்டு லட்சம் இலவச மின் இணைப்புகளை விவசாயிகளுக்கு வழங்கி உள்ளோம்.

மேலும் கோவை மாவட்டத்தின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்திற்காக ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கி இம்மாவட்ட வளர்ச்சிக்கு தமிழக முதல்வர் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார்" என்றார்.

தொடர்ந்து பெள்ளேபாளையம் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட மற்றும் சீரமைக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு அமைச்சர் வழங்கினார்.

அது தொடர்ந்து பகத்தூர் வள்ளி கும்மி நாட்டியக் குழுவினரின் கும்மி நடனம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார், பாடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ. ரவி, குன்னத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் கீதா தங்கராஜ், அன்னூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் தனபால், பள்ளேபாளையம் ஊராட்சி தலைவர் பிரஸ்குமார், காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். எம். டி. கல்யாணசுந்தரம் ,ஒன்றிய கவுன்சிலர் அன்னூர் ஆனந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பா.அருண்குமார், சி.ஆர். ராமச்சந்தின், தலைமை செயற்குழு உறுப்பினர் டி. ஆர். சண்முகசுந்தரம், மேற்கு ஒன்றிய செயலாளர் சுரேந்திரன், கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாண சுந்தரம், சிறுமுகை பேரூர் கழக செயலாளர் உதயகுமார், துணை செயலாளர் செந்தில்குமார், பெள்ளேபாளையம் ஊராட்சி மன்ற துணை தலைவர் சுரேந்திரன் தென்னை சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களை

மகளிர் அணியினர் பெண்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும்!

மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வேண்டுகோள்!

நாமக்கல், ஜன. 6- நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் திருச்சி சாலையில் நளா ஹோட்டலில் நடைபெற்றது. மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.ராணி தலைமை தாங்கினார். மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஜோதிலட்சுமி வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ. இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கௌரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பேசியதாவது, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெண்களின் வாழ்க்கைத்தரம் உயர பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பெண்களுக்கு இலவச பஸ் பயணம், மகளிர் உரிமைத். தொகை, மகளிர் சுய உதவி குழுவினருக்கு கடன் உதவி, புதுமைப் பெண்கள் திட்டம், பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களால் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

பெண்களுக்கு, தந்தையாகவும், சகோதரராகவும், இப்படி தாயுமானவராக இருக்கக் கூடியவர் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள். பெண்கள் முழுமையாக நம்முடைய முதலமைச்சர் தான் எதிர்கால தமிழினத்தை காப்பாற்றக் கூடியவர் என்று நம்புகின்றனர். எனவே இனி வரும் தேர்தலில், முழுமையாக பெண்களின் ஆதரவு நமக்கு கிடைக்கும். தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களை, மகளிர் அணியினர் பெண்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும். கிழக்கு மாவட்டத்தில் உள்ள 3 சட்டசபை தொகுதியிலும் உள்ள அனைத்து வாக்குச்சாவடியிலும், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகளை நியமிக்கவேண்டும்.

அதற்கான பணிகளை மகளிர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அந்தந்த நகர, ஒன்றிய பேரூராட்சி செயலாளர்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். நமது மாவட்டத்திற்கு என்று ஒரு சிறப்பு உள்ளது. மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நமது மாவட்டத்தை சார்ந்தவர். நமது மாவட்டம் மகளிர் அணி செயல்பாட்டில் முன்னோடியாக இருந்தால் தான் அவருக்கும் பெருமை, அனைவருக்கும் பெருமை. இவ்வாறு பேசினார்.

கூட்டத்தில் வழக்கறிஞர் நக்கீரன், மாநகர மேயர் து.கலாநிதி, துணை மேயர் எஸ்.பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கேபி.இராமசுவாமி, அ.அசோக்குமார், கே.பி.ஜெகநாதன், பெ.நவலடி, ஆர்.எம்.துரைசாமி, வி.கே.பழனிவேல், பி.பால சுப்பிரமணியம், எம்.பி.கௌதம், ரா.ஜெயபிரகாஷ், எஸ் எஸ்.செந்தில் முருகன் மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டம், அன்னூர் குன்னத்தூர் ஊராட்சியில் ரூ 30 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து மேட்டுப்பாளையம் வட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெள்ளேபாளையம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.60 லட்சம் மதிப்பில் எலகம்பாளையம் பகுதியில் புதிய நீருந்து நிலையம், ரூ.8 லட்சம் மதிப்பில் ராசடி ஏடி காலனி பகுதியில் சுகாதார வளாகம், ரூ.6.65 லட்சம் மதிப்பில் பெள்ளேபாளையம் ஜே.ஜே.நகர் பகுதியில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் என மொத்தமாக ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இதனை தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.